# அற இலக்கியங்களில் நட்பாராய்தல்: திருக்குறளையும், நாலடியாரையும் அடிப்படையாகக் கொண்டதோர் மதிப்பீடு

(The Investigation in forming Friendships in Tamil Ethical Literature: with Special reference to tirukkuṟaḷ and nālaṭiyār)

**நா. சுதர்ஷினி**

*விரிவுரையாளர், இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம்*

[illegible]

**ஆய்வுச் சுருக்கம்**

ஒவ்வொரு மனிதனுடைய வாழ்க்கையிலும் நட்பு இன்றியமையாத உறவு எனலாம் . சிறந்த நட்பு எக்காலத்திலும் விட்டுப் பிரயாது , எக்காலத்திலும் மாறாது, அத்தகைய நட்பு ஒருவரை நல்வழியில் இட்டுச்செல்லும். ஆனால், தீயவர்களோடு ஏ ற்படுகின்ற நட்பானது தீயவழியில் இட்டுச்செல்லும், அது நமது வாழ்க்கையை சீர்குலைத்துவிடும், நீண்டநாட்கள் நிலைத்து நிற்கும் இயல்பற்ற அத்தகைய நட்பு பல வகையிலும் வேதனைக்குட்படுத்திவிடும் ஏனெனில், ஒருமுறை ஒருவரோடு நட்பு கொண்டுவிட்டால் அவர்களைவிட்டு பிரிவது அத்து ணை இலகுவான செயலாக இருக்காது. மாறாக மரண வேதனையைவிட அதிகமான வேதனையைத் தந்து செல்லும். ஆதலால் ஒருவரோடு நட்பு கொள்வதற்கு முன் ஆராய்ந்து அறிவது அவசியமாகிறது. சிறந்த நட்பால் பெருமையடைந்தோர் மத்தியில் ஆராயந்தறியாது நட்பு கொண்டு பல துன்பங்களை அனுபவித்துள்ள பலர் பற்றிய பல கற்பிதங்களையும் இலக்கியங்களிற் காணலாம் . ஆதலால், ஒருவரை நம்முடைய நண்பராக்கிக் கொள்வதற்கு முன் அவரைப் பற்றி நன்கு ஆராய வேண்டும். இருப்பினும், நல்லதொரு நண்பனை அல்லது நண்பியைத் தெரிவு செய்து நட்பு கொள்வது என்பது எத்துணை தூரம் பொருத்தமானது, அது அறமாகு மா என்பது பற்றிய சிந்தனையும் மானிடர்கள் மத்தியில் காணப்படுகின்றது. இவ்வகையில், மானிட வாழ்க்கை செம்மையுற அமையும் வகையில் அறம்போதிக்கும் அறஇலக்கியங்களான திருக்குறள் , நாலடியார் என்பன நட்பு கொள்ளும் முன்னர் ஆய்ந்து ஆராய்ந்து நட்பு கொள்ளுதலின் அவசியம் பற்றி வெளிப்படுத்துமாற்றினை அறியும் நோக்கோடு , ‘அறஇலக்கியங்களில் நட்பாராய்தல்: திருக்குறளையும், நாலடியாரையும் அடிப்படையாகக் கொண்டதோர் மதிப்பீடு ’ எனும் தலைப்பில் நாலடியார், திருக்குறள் என்பவற்றை முதன்மை ஆதாரங்களாகக் கொண்டு இவ்வாய்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது

முதன்மைச் சொற்கள்: அறஇலக்கியங்கள், நட்பு, நட்பாராய்தல், திருக்குறள், நாலடியார்

சுயநலமற்ற, எதுவித எதிர்பார்ப்புமற்ற, புரிதலுடன் கூடிய உறவே நட்பு எனலாம். சாதி, மதம், அந்தஸ்த்து, பொருளாதார நிலை என எதனையும் கருத்திற் கொள் ளாது அன்பு,

ஒத்த உணர்வு, புரிதல் என்பவற்றை அடித்தளமாய் கொண்டு தோன்றும் நட்பானது அது தோன்றிய காலத்திற் உள்ளத்திற் தோ ற்றுவித்த அதே உணர்வோடு மாறாது நிலைத்திருக்க வேண்டும் . எனவேதான், இத்தகைய நட்புக்கு முக்கியத்துவம் கொடுக்கும் பல எடுத்துக்காட்டுகளை தமிழ் இலக்கியங்களில் காண முடிகிறது . இராமனினதும் அனுமனின தும் நட்பு , கிருஷ்ணருக்கும் குசேலருக்கும் இடையிலான நட்பு, துரியோதனுக்கும் கர்ணனுக்கும் இடையிலான நட்பு என்பன இதற்குத் தக்க எடுத்துக்காட்டுகளாகும். இவ்வகையில், ஒருவனுடைய நண்பர்கள் நல்லவர்களாக இருந்தால், அவர்கள் அவனுக்கு உறுதுணையாக இருந்து உதவி செய்வார்கள் . அவனுக்குத் துன்பம் நேர்ந்தால் அதைத் தமக்கு நேர்ந்த துன்பமாகக் கருதி அவனுடைய துன்பத்தில் பங்கேற்பார்கள் . அவன் தவறான வழிகளில் சென்றால் அவனை இடித்துரைத்து நல்வழி காட்ட முயற்சி செய்வார்கள் . அவர்களின் துணைகொண்டு எதனையும் எளிதில் சாதிக்க முடியும் . ஆகவே, நல்ல நண்ப ர்களால் பல நன்மைகள் கிடைக்கின்றன. ஆனால், தவறான நண்பர்கள் அதாவது நம்மை தவறாய் வழிநடத்தக் கூடியவர்கள், நட்பை பொழுதுபோக்காக எண்ணக்கூடியவர்கள் , துன்பத்தில் துணைநிற்கும் மனமற்றவர்கள் நண்பர்களாக வாய்த்துவிட்டால் , பல இடர்களுக் கு முகங்கொடுக்க நேரிடலாம் . இத்தகைய நட் பு தோன்றி ய காலத்திற் உள்ளத்தில் ஏற்பட்ட மகிழ்ச்சியைவிட பன்மடங்கு வேதனைக்கு ஆளாக நேரிடும் . அதுமட்டுமின்றி நட்பு கொண்டுவிட்ட பின் தன்னுடைய அதன் ஒவ்வாமை பற்றி அறிந்து விலக நேரிடும் போது பெருந்துன்பம் ஏற்படக்கூடும். அது மரண வேதனையை காட்டிலும் பன்மடங்கு வேதனையை ஏற்படுத்திவிடும். எனவேதான், தமிழ் இலக்கியங்கள் இருதரப்பட்ட நட்பின் விளைவுகளையும் வாழ்க்கைப் பாடங்களாக எடுத்துரைக்கின்றன . குறிப்பாக நல்ல நட்பு நம்மை சிறப்புறச் செய்வது போல , தீயநட்பு நம்மை சீர்குலைந்து போய்விடச் செய்துவிடக்கூடியது. எனவே, நாம் நட்பு எனும் உறவை பிறிதொருவருடன் ஏற்படுத்திக் கொள்ளமுன்னர் , அவர் பற்றி ஆராய்ந்தறிந்து அதன் பின்னர் நட்பு கொண்டால் இத்தகைய பாதக விளைவுகளிலிருந்து எம்மை பாதுகாத்துக்கொள்ள முடியும். அவ்வடிப்படையில், அறம் போற்றிய சங்கமருவிய காலத்தில் , திருவள்ளுவரால் இயற்றப்பட்ட திருக்குறளிலு ம், சமண முனிவர்கள் பலர் பாடிய பாடல்களின் தொகுப்பு நூலாக காணப்படும் நாலடியாரிலும் நட்பு தொடர்பாகவும் , நட்பாராய்தலின் அவசியம் தொடர்பாகவும் பல விடயங்கள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன

இதனடிப்படையில் 'நட்பு' எனும் பதத்தினை உள்ளங் கலத்தல் என்று வரைவிலக்கணப்படுத்துகிறது நாலடியார். அதனை,

பலநாளும் பக்கத்தார் ஆயினும், நெஞ்சில்
சிலநாளும் ஒட்டாரோடு ஒட்டார்; -பலநாளும்
நீத்தா ரெனக்கை விடலுண்டோ தந்நெஞ்சத்து
யாத்தாரோடு யாத்த தொடர்பு? (நாலடியார்: 214)

என்ற மேற்கூறப்பட்ட செய்யுளின் ஊடாக அறியக் கூடியதாகவுள்ளது . அதாவது, பல நாட்களாக அருகிலேயே இருப்பவர்கள் என்றபோதிலும் சில நாட்களேனும் உள்ளத்தால் ஒன்றுபடாதவர்களோடு , அறிவுடையவர்கள் நட்புச் செய்யவே மாட்டார்கள். ஏனெனில் தம் உள்ளத்திலே அன்பாற் பிணிக்கப் பட்டிருப்பவர்களுடன் கொண்டிருக்கும் தொடர்பினை அவர்கள் பலநாட்களும் தம்மை விட்டு

நீங்கியிருக்கின்றனர் என்று கருதி , விட்டுவிடுவது மிகவும் அரிதாகும் . இவ்வகையில் உள்ளங்கலத்தலே நட்பு என்பது புலப்படுகிறது

திருக்குறளில், நட்பு, நட்பின் சிறப்பு, நல்ல நண்பர்களின் கடமைகள் என்பவற்றை 'நட்பு' எனும் தனி அதிகாரத்திற் கூறப்பட்டுள்ளதோடு, ஆராய்ந்து நட்பு கொள்வதன் அவசியம் பற்றி 'நட்பாராய்தல்;' எனும் அதிகாரத்தில் கூறப்பட்டுள்ளது இவ்வகையில்,

'புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாங் கிழமை தரும்' (785)

என்ற குறட்பாவினூடாக நட்புச் செய்வதற்குத் தொடர்பும் பழக்கமும் வேண்டியதில்லை, ஒத்த உணர்ச்சியே நட்பு ஏற்படுத்துவதற்கு வேண்டிய உரிமையைக் கொடுக்கும். அதாவது இருவரது எண்ணமும் ஒத்திருந்தால் அதுவே நட்பு என்னும் தோழமையைக் கொடுக்கும் எனப்படுகிறது மேலும்,

'முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்
தகநக நட்பது நட்பு' (786)

என்ற குறட்பாவினூடாக, முகம் மட்டும் மலரும் படியா நட்பு செய்வது நட்பு அன்று , நெஞ்சமும் மலரும் படியாக உள்ளன்பு கொண்டு நட்பு செய்வதே நட்பாகும் என்ற கருத்தும் வெளிப்படுத்தப்படுகின்றது இவ்வாறு, உள்ளத்தால் கலந்து ஒன்றுபட்ட அன்பு பிறரை நல்வினை செய்யத் துணை செய்யும் காவலாக நட்பு காணப்படுவதோடு உளங்கலந்த நண்பர்கள் பல நாட்களாகப் பிரிந்திருக்கிறார்கள் எனக் கருதி , எவரும் அவர் நட்பை வெறுத்து விடாமையால் பிரிவுத்துயரையும் தருவதில்லை. இவ்வகையில், உள்ளத்தாற் கலந்த, பிரிவை அறியாத, அனைத்தையும் கடந்த உறவே நட்பு என்பது தெளிவாகின்றது

மேலும், எம்மை காக்கும் பெருங்காப்பு என்றும் பொழுதுபோக்குக்காக நட்பு கொள்வது தவறு என்றும், அதுபோல பொழுதுபோக்குக்காகவே நட்பு என்று எண்ணத்துடன் நட்பு கொள்வதும் தவறு என்பது ம் வலியுறுத்தப்பட்டு, நட்பே அரியது , பிறரின் பகையிலிருந்து எம்மைக் காக்கும் காவல் அதுவேயன்றி வேறில்லை என்ற விடயமும் திருக்குறளில் நட்பு எனும் அதிகாரத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது . இவ்வாறாக, மிகவும் இன்றியமையாத உறவாக கருதப்படும் நட்பு ஒருவரைப் பற்றி ஆராய்ந்தறிந்த பின் ஏற்படுமானால் அதுவே மிகச் சிறப்பு என்ற காரணத்தினால் , "நட்பாராய்தல்" என்ற அதிகாரத்தில் அதன் இன்றியமையாமை வலியுறுத்தப்பட்டுள்ளது . அதனையொப்ப நாலடியாரிலும் "நட்பாராய்தல்" எனும் அதிகாரத்தில் நல்ல நண்பர்கள் என எண்ணி கூடாதவர்களோடு நட்பு பாராட்டாது ஆராய்ந்து நல்லவர்களோடு நட்பு பாராட்டுதல் வேண்டும் என்பது கூறப்பட்டுள்ளது

ஒருவருடன் நட்பு கொள்ளும் போது அறிந்துகொள்ள வேண்டிய விடயங்கள் என்ற அடிப்படையில், பல நாளும் அருகிலேயே இருந்தாலும் உள்ளம் கலவாதவரோடு அறிவுடையவர் நட்புக் கொள்ளக் கூடாது . உள்ளங்கலத்தலே நட்பு என்பதை நன்கு அறிந்து அவர்களுடன் நட்பு கொள்ளுதல் வேண்டும் எனப்படுகிறது. மேலும், ஒருவரது

குணத்தையும், குடிப்பிறப்பையும், குற்றத்தையும், சுற்றத்தையும் ஆராய்ந்து நட்பு கொள்ளுதல் வேண்டும் எனத் திருக்குறள் வலியுறுத்துகின்றது . ஏனெனில், அத்தகு பண்புடையவர்களில் உயர்குடியில் பிறந்து தன்னைப் பற்றி உலகம் கூறும் பழிக்கு அஞ்சுபவர்களாக இருப்பதனால் த ன் நண்பன் அல்லது நண்பி உலகத்தின் பழிச்சொல்லுக்கு ஆளாகக் கூடாது என்ற எண்ணத்தில் தன் நட்பையும் வழிநடத்துவர். ஆதலால் அத்தகையோரது நட்பை அவன் விரும்பியவற்றைக் கொடுத்தேனும் அடைந்துவிட வேண்டும் என்று வலியுறுத்துகிறது

அவ்வாறு குணத்தையும், குடிப்பிறப்பையும், குற்றத்தையும், சுற்றத்தையும் ஆராய்ந்து கண்டறிந்த பின்னர், அறிவுள்ளவர்களோடு ஏற்படும் நட்பானது பிறை வளர்ந்து முழு மதியாவது போல வளர்ந்து செல்வதோடு , அறிவில்லாதவருடனான நட்பு முழுநிலவு தேய்ந்து பிறை போல தேய்ந்து போய்விடுவது போன்றதாகும் என்கிறது திருக்குறள் . மேலும், நல்லதொரு நூலை கற்கக் கற்க இன்பம் பெருகுவது நல்ல பண்புள்ளவர்களோடு கொள்ளும் நட்பானது பழகப் பழக இன்பம் தரவல்லது என்ற கருத்து திருக்குறளில் பின்வரும் குறட்பாவினூடாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது

> நவில்தொறும் நூனயம் போலும் பயில்தொறும்
> பண்புடை யாளர் தொடர்பு (783)

நாலடியாரில், நூல்களிலே சொல்லப்பட்டுள்ள உட்பொருள்களை உணர்ந்தவர்களாகக், கற்றற்கு உரியனவெல்லாம் கற்றுத் தேர்ந்தவர்களுடைய தொடர்பானது , எப்போதும் கரும்பைக் குருத்திலே தொடங்கி அடிநோக்கித் தின்பது போன்றதாக இருக்கும் . எக்காலத்தும் இனிய தன்மை இல்லாதவர்களுடைய தொடர்போவென்றால், குருத்திற்கு எதிரே செல்லும்படியாக , அடியிலிருந்து கரும்பை நுனி நோக்கித் தின்பதைப் போன்றதாகும் என கற்றவர் நட்பு வரவர இனிக்கும் ; கல்லாதவர் நட்பு வரவரக் கசக்கும் என்று கூறிக் கற்றவர்களின் நட்பையே கொள்ளுதல் வேண்டும் என வலியுறுத்துவதைக் காணலாம் . இவ்வகையில் திருக்குறளிலும் நாலடியாரிலும் அறிவில்லாதவர்கள், கருத்துணர்ந்துக் கல்லாதவர்களின் நட்பை விலக்குமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

> இற்பிறப்பு எண்ணி, இடைதிரியார் என்பதோர்
> நற்புடைக் கொண்டமை அல்லது - பொற்கேழ்
> புனலொழுகப் புள்ளிரியும் பூங்குன்ற நாட
> மனமறியப் பட்டதொன் றன்று. (212)

என்ற செய்யுளின் ஊடாக ஒருவருடைய நல்ல குடிப்பிறப்பினைக் கருதி , ஒருவருடன் நட்பு கொள்ளவேண்டும் எனப்படுகிறது. ஏனெனில், அவர் இடையிடைலே மாறுபடமாட்டார்கள் என்று சொல்லப்படுவதைக் காரணமாகக் கொண்டு நட்பு கொள்ள முடியுமேயன்றி, ஒருவருடைய மனநிலையறிந் து நட்புச் செய்வது என்பது இயலாத செயல், ஆதலால் அவர் நற்குடிப் பிறந்தவரா என்பதை அறிந்து அவருடன் நட்புச் செய்தல் வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது. மேலும், பலகாலம் பழகினாலும்; பழகிப்பழகித் தெரிந்திருந்தாலும் தன் பாகனையே சமயத்திற் யானை கொன்றுவிடுவது போல தீய நண்பர்களும் தீவினையாக அமைந்துவிடக்கூடும் . ஆனால், தன்னை

உடையவனாயிருந்தவன், எறிந்த வேலானது தன் உடலிலே தைத்திருந்த போதும். தன் வாலைக் குழைத்து அவனிடம் அன்பு காட்டிக் கொண்டே நிற்கும் நாய் . போல தமக்கு தீமை வந்து சேர்ந்த போது ம் அன்பு காட்டுவோரின் நட்பையே தழுவிக்கொள்ள வேண்டும். இவ்வாறு தமக்கு தீமை வந்த போதும் நட்புக்குத் துணை செய்யும் நண்பர்களைத் தேர்ந்து நட்பு கொள்வதன் அவசியம் யாதெனில் , கீழ்த்தரமானவர்களுடன் நட்பு கொள்ளும் பட்சத்தில் பல தீய விளைவுகளுக்கு முகங்கொடுக்க நேரிடலாம். ஏனெனில், அவர்கள் ஒருநாள் பராமரிக்கத் தவறினாலும் பயன்கெடுகின்ற கமுகு மரத்தைப் போன்றவர்கள் . மற்றைய நடுத்தரமான பண்புடையவர்களோ, இடையிடை உபசரணை இல்லாமற் போனால் பயன்கெடும் தென்னை மரத்தைப் போன்றவர்களாக தமது பண்பிலிருந்து விலகிவிடக்கூடும் . முதற்றரமானவர்களாகிய பழமை ப் பண்புகளிலே சிறந்தவர்களுடைய நட்போ எண்ணுதற்கும் அருமையான பனைமரத்தைப் போன்று நட்ட அக்காலத்தின் தன்மை போன்றே, உபசரணை செய்தாலும் செய்யா விட்டாலும் ஒரே தன்மையாக என்றும் பயன்தருவதாயிருக்கும். பனை பண்புள்ளவர்களைத் தேர்ந்து நட்பு செய்தல் அவசியமாகும். அத்தகைய நட் பே சிறந்தது எனப்படுகிறது . மேலும், உண்மையான நட்பு முதலில் வெளிப்படுத்தப்பட்ட அன்பினையே எப்பொழுதும் வெளிப்படுத்துவதாக இருக்கவேண்டும். அதுவே நட்புக்குரிய முதன்மையான பண்பு . அவ்வாறன்றி, மரக்கிளைகளிலே பூத்திருக்கும் மலர்கள் முதலில் மலர்ந்துப் பின் குவிதல் போல , முதலில் வெளிப்படுத்திய மாறாத விருப்பமுடைய அன்பை வெளிப்படுத்த வேண்டும் . அதாவது நட்பினை முறையே பேணிக் காத்தலும் நட்பின் தலையாய பண்பாகப் பேணப்பட வேண்டும் . தோண்டப்பட்ட நீர்நிலையிலேயுள்ள நீர்ப் பூக்களைப்போல , முதலிலே முகமலர்ந்து பின்னர் தன்னிலையிருந்து விலகுவோ ரை விரும்புகிறவர்களும், அவர்களோடு நட்புச் செய்கிறவர்களும் எவருமே இவ்வுலகத்தில் இல்லை. அவர்கள் நட்பு கொள்வதற்குத் தகுதியற்றவர்கள் என்ற கருத்து வெளிப்படுத்தப்பட்டுள்ளதைக் காணலாம்.

அதுமட்டுமின்றி, ஒருவருக்குச் செய்யும் உதவியின் மதிப்பு அதனைப் பெற்றுக் கொள்பவரின் தகுதியிலேயே இருக்கின்றது என்பதை பின்வரும் குறட்பா வலியுறுத்துகின்றது.

> உதவி வரைந்தன்று உதவி உதவி
> செயப்பட்டார் சால்பின் வரைத்து. (105)

அதாவது, உதவியானது அதன் அளவையே எல்லையாக உடையது அன்று: அது உதவி செய்யப்பட்டவரின் பண்பையே தனக்கு அளவாக உடையதாகும் . இவ்வகையில் தனது நண்பனுக்கு ஒரு துன்பம் நேரும் போது நாம் சிந்திக்காது உதவி செய்வோமாகில் அந்த நட்பு ஆராய்தறிந்ததன் பின் ஏற்பட்டதெனில் செய்யும் அவ்வுதவி மதிப்பிற்குரியதாகிறது. இதனையே நாலடியார் , அரிசியைக் கழுவிய கழுநீரிலே சமைத்த இலைக்கறியே ஆனாலும் , ஒருவன் சிறப் புடையதாகக் கருதி ஏற்றுக் கொண்டால் அதுவே அவனுக்கு அமுதமாக விளங்கும் . சிறந்த முறையிலே தானஞ் செய்யப்பெற்ற கறிவகைகளோடும், துவையல்களோடும் கூடிப் பெற்ற வெண்மையான சோறே என்றாலும் , அன்பில்லாதவர் கையிலிருந்து பெற்று உண்பது என்பது எட்டிக்காயைத் தின்பதுபோலக் கசப்பாகவேயிருக்கும். உணவின் சுவையும் தருபவரின்

நட்புத் தகுதி பற்றியே கருதியே கொள்ளப்படுவதாகும் என்கிறது . அதாவது உணவின் சுவையும் தருபவர், பெறுபவர் ஆகிய இருவரின் பாற்பட்டதாக இருக்கும் பட்சத்தில் அது பொருத்தமாய் இருக்கும்போதே சுவை பெறுகிறது . இவ்வகையில் நட்பும் ஆராய்ந் து தகுதி உடையவரோடு ஏற்படும் பட்சத்திலேயே மதிப்பிற்குரியதாகிறது

மேலும், நட்பென்பது பொழுதுபோக்கான பெயரளவில் மட்டும் நட்பு பாராட்டி இணைந்திருக்கும் தொடர்பல்ல , அதலால், நாயின் காலிலேயிருக்கின்ற சிறிய விரல்களைப் போல மிகவும் நெருக்கமுடையவராக விளங்கினாலும் , ஈயின் காலளவாவது உதவாதவர்களுடைய நட்பு எவ்வித பயனையும் தராது . வயல்களை விளையப் பண்ணுகின்ற வாய்க்காலைப்போல , ஒருவருக்கு உதவுபவர்களது தொடர்பானது தொலைவிலுள்ள தென்றலும் அதனையே தேடிப்போய்ப் பெற்றுக் கொள்ளல் வேண்டும் என்று நாலடியாரில் கூறப்படுகிறமையானது . நெருக்கமுடையவராயிருந்தும் சிறு உதவியும் செய்யாதவரை வெறுத்து , எட்டியிருந்தாலும் உதவும் பான்மையுடையவரின் நட்பினைத் தேடிப் பெறுதல் வேண்டும் என்பதை வெளிப்படுத்துகின்றது . இவ்வாறாக ஆராயந்தறிந்து தெளிவான அறிவினையுடையவர்களோடு நட்பு கொள்ளுதல் வேண்டும். அவ்வாறன்றி, தெளிவான அறிவு இல்லாதவர்களுடைய நட்பினைத் தழுவிக் கொள்வதைக் காட்டிலும் அவர்களுடைய பகைமையே ஒருவனுக்கு நன்மை தருவதாக அமைகிறது என்பதை பின்வரும் செய்யுள் வெளிப்படுத்துகிறது

> தெளிவிலார் நட்பின் பகைநன்று; சாதல்
> வினியா அருநோயின் நன்றால், அளிய
> இகழ்தலின் கோறல் இனிதே; மற்று இல்ல
> புகழ்தலின் வைதலே நன்று. (219)

மேலும், எந்த மருந்தாலும் போகாத அரிய நோயிலே கிடந்து துன்புறுவதைக் காட்டிலும், சாதலே ஒருவனுக்கு நன்மை தருவதாகும் என்று கூறப்படுவதன் ஊடாக ஆராய்ந்து நட்பு கொள்வதன் அவசியம் வலியுறுத்தப்படுகிறது . ஒருவனது நெஞ்சம் புண்படும் படியாக இகழ்ந்து பேசுதலைவிட , அவனைக் கொன்று விடுதவே இனியதாகும். ஒருவனிடம் இல்லாத குணங்களை எல்லாம் இருப்பதாகக் கூறிப் பொய்யாகப் புகழ்ந்து பேசுவதைவிட அவனை வைதலே நன்மை தருவதாகும் . நட்புக் கொள்பவர் இவற்றை எல்லாம் ஆராய்ந்து ஏற்றவாறு நடந்து கொள்ளல் வேண்டும் எனப்படுகிறது.

ஆராயாமல் நட்பு பாராட்டுவதால் ஏற்படக்கூடிய விளைவுகள் பற்றிக் கூறுகையில் திருக்குறளில், ஆராயாமல் நட்பு கொள்வது போல கேடுபயக்கும் செயல் வேறொன்றும் இல்லை என்பதை பின்வரும் குறட்பா வலியுறுத்துகின்றது

> 'நாடாது நட்டலிற் கேடில்லை நட்டபின்
> வீடில்லை நட்பாள் பவர்க்கு.' (791)

மேலும் 'ஆய்ந்துஆய்ந்து..' நட்பு கொள்ளுதல் வேண்டும் என்பது இரண்டாம் குறளில் வலியுறுத்தப்பட்டு '.... தான்சாம் துயரம் தரும் ;' என்று ஆராயாத நட்பு இறுதியில் தான்

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு

சாவதற்குக் காரணமான பொல்லாத துயரத்தைத் தரவல்லது என்பது புலப்படுத்தப்படுகிறது. தீய நண்பர்கள் தன்னோடு இருக்கும் நண்பனுக்கு கேடுவரும்போது கைவிட்டு ஒதுங்குபவரின் பொய்யான நட்பு , அவனை எமன் வந்து கொல்லும் போதும் தன் நண்பனின் செயலை எண்ணும் போதும் அது மரணவேதனையைக் காட்டிலும் அவனது நண்பனின் செயல் அவனது உள்ளத்தைத் தீப்போலச் சுடும் . ஆகவே ஆரா ய்ந்தறியாத நட்பு கொடிய வேதனையாகிய மரண வேதனையைக் காட்டிலும் அதீத வேதனையை ஏற்படுத்த வல்லது என்ற கருத்து வெளிப்படுத்தப்பட்டுள்ளது இவ்வகையில் அறஇலக்கியங்கள் ஆராய்ந்தறியாத நட்பு மரணத்திற்கு ஒப்பானது என்பதை வலியுறுத்தி நிற்கின்றமையைக் காணலாம்

நன்மை அல்லாதவற்றைச் செய்யும் போது கண்டித்து மனம் வருந்துமாறு அறிவுரை கூறி, உலக நடை அறிந்து அதன்படி தனது நண்பனை நடத்தும் திறமை உடையவர்கள் நல்ல நண்பர்கள் . அத்தகைய பண்புடைய நண்பர்களைப் பெறத் தவறியவர்கள் தீமையாக எல்லோராலும் வெறுக்கப்படும் கேட்டிலும் நன்மையைக் காணலாம் . ஏனெனில் உடனிருக்கும் தன் நண்பனின் அன்பை நன்றாக அறிந்து கொள்ள அந்தக் கேடு துணைசெய்யும். அவ்வாறு தன்னுடைய நண்பனை அறிந்து கொள்ளும் பட்சத்தில் அறியாமல் கொண்டுவிட்ட நட்பை விட்டுவிட்டு அவரிடத்திலிருந்து நீங்கிவிடுதே அவருக்குரிய சிறந்த ஊதியம் ஆகும். உள்ளத்தால் பொருந்தாத ஒருவரது நட்பை அவர் விரும்பியது ஒன்றைக் கொடுத்தேனும் விட்டுவிடவேண்டும் என்ற கருத்து நாலாடியாரின் பின்வரும் செய்யுளின் ஊடாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது

“மரீஇப் பலரொடு பன்னாள் முயங்கிப்பு
பொரீஇப், பொருள்தக்கார்க் கோடலே வேண்டும், பரீஇ
உயிர்செகுக்கும் பாம்பொடும் இன்னா,
மரீஇய, பிள்ளைப் பிரிவு.” (220)

அநேகம் பேருடன் சேர்த்து , பல நாட்களாகக் கலந்து பழகி , மனநிலையிலே ஒப்பாகிப் பொருளாகக் கருதும் ஒரு தகுதி உடையவர்களையே நட்பினராகக் கொள்ளுதல் வேண்டும். சினந்து எழுந்து உயிரைப் போக்குகின்ற பாம்பினோடும்கூ ட முதலிலே பழகிவிட்டால், பின்னர் விட்டுப் பிரிவதென்பது மிகவும் துன்பந்தருவதாயிருக்கு ம் அதுபோல, தீயோரில் நட்பை முதலிலேயே விலக்கிவிட வேண்டும், நீடித்துப் பழகினால் அதனை விடுவது எளிதாயிராது . அதனால், அப்படிப் பழகாமவிருப்பதே சிறந்ததாகும் எனவும், ஊக்கம் குறைவதற்கு க் காரணமான செயல்களைச் செய்வதைத் தவிர்ப்பது போல துன்பக் காலத்தில் கைவிடுவார் நட்பைத் தவிர்த்துவிடுதல் வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது

இவ்வகையில், திருக்குறள், நாலடியார் போன்ற அறஇலக்கியங்கள் ஒருவரை தனது நண்பராக ஏற்றுக் கொள்வதற்கு முன்னர் பல முறை சி ந்திக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி நிற்கின்றமையைக் காணலாம் . அவ்வாறு ஆராய்ந்தறிந்த பின்னர் இருவரிடையே ஏற்படும் நட்பென்னும் உணர்வானது பல நன்மைகளைத் தரக்கூடியது . ஆனால் தவறியும் தீயவர் நட்பனைத் தழுவிக் கொள்ளக் கூடாது அவ்வாறு இருவருக்கிடையே நட்பு ஏற்பட்டுவிட் ட போதிலும் அது தவறான நட்பு என்பதை அறிந்து கொண்ட பொழுதிலேயே அதனைத் தவிர்த்துவிட வேண்டும் என்கின்ற

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு*

இவ்விலக்கியங்கள். அப்பிரிவு எமன் உயிரைப் பறிக்கும் போது ஏற்படுத்தும் மரணவேதனையைக் காட்டிலும் அதிக வேதனையைத் தந்த போதும் அத்தகை நட்பை விலக்கிவிட வேண்டும் எனப்படு கிறது. நல்ல நண்பர்கள் என்று எண்ணி போலியானவர்களோடு நட்பு பாராட்டும் பட்சத்தில் காலம் கடந்து அவர்களைப் பற்றி அறிந்து கொள்வதாவது மனதளவில் பல துன்பங்களைத் தோற்றுவிக்கவல்லது , அவர்களைவிட்டு நீங்கவும் முடியாது. அவ்வாறு நீங்க முயற்சிப்பது நட்புக்கு இழுக்காக மாறிவிடும். ஆகவே, இத்தகைய பல தீங்குகளையும் கருதியாவது , நண்பர்களைக் கொள்வதிலே நாம் மிகவும் விழிப்புடையவர்களாக இருக்கவேண்டும் எனவும் , ஆராய்ந்தறிந்த பின் நட்பு கொள்ளுதல் நட்பென்னும் உறவின் நிலையான பயன்களை இடரின்றிப் பெற்றிட வழிவகுக்கிறது என்பதால் ஆராய்ந்து நட்பு கொள்ளுதல் அவசியம் என்பதை திருக்குறளும், நாலடியாரும் வலியுறுத்தி நிற்கின்றன.

சான்றாதாரங்கள்

[1] சுப்புரெட்டியார்.ந., (2004), வள்ளுவரின் வாழ்வியல் சிந்தனைகள், சென்னை: அவ்வை

[2] சௌரிராசன். பொன், (2005), திருக்குறளில் பொதுநிலை உத்திகள், சென்னை: உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்.

[3] திருவள்ளுவர் - திருக்குறள்

[4] புலியூர்க்கேசிகன்., (1965), நாலடியார் தெளிவுரை, சென்னை; சாரதா பதிப்பகம்.

[5] புலியூர்க்கேசிகன்., (2010), இருபத்தி ஏழாம் பதிப்பு, திருக்குறள் புதிய உரை, சென்னை; பூம்புகார் பதிப்பகம்

[6] பழநிமாணிக்கம்,மொ., (ப.ஆ), (1991), தித்திக்கும் திருக்குறள் முத்துக்கள், தஞ்சை: திருக்குறள் பேரவை.

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிர்காலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு*

© 2023, IRJTSR